# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2004/49 - 2017 පෙබරවාරි මස 01 වැනි බදාදා - 2017.02.01

*2004/49 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

*அரசியலமைப்பின் 57 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்களை கையளித்தல்*

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 57 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இங்கு "அ" அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் வகுதிகள் தொடர்பாக அட்டவணையின் III ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள் அட்டவணையின் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் இத்தால் கையளிக்கப்படுகின்றன.

2. ஆயினும், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள ஏதேனும் அதிகாரங்களை கையளித்தல் பற்றிய விடயப் பரப்பு தொடர்பாக அல்லது ஆணைக்குழுவினால் அவ்வாறு மேற்கொள்ளப்படுவதற்காக ஏதேனும் கையளிக்கப்பட்ட அதிகாரங்களை செயல்படுத்துதல் விடயமாக அல்லது எழக்கூடிய நிச்சயமற்ற நிலைமையொன்றின் போது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதியானதும், உறுதியானதுமாக அமையும்.

3. இதற்கு மேலதிகமாக அட்டவணையின் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள எவரேனும் அரசாங்க உத்தியோகத்தரொருவர் அட்டவணையின் I ஆம் நிரலுக்கு நேரொத்த விடய இலக்கத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் வகுதியைச் சேர்ந்த அரசாங்க உத்தியோகத்தரொருவருக்கு எதிராக நடைபெறும் ஏதேனும் ஒழுக்காற்று விசாரணையின் போது முறைப்பாட்டாளராகவோ அல்லது சாட்சியாளராகவோ அல்லது பலமுள்ள சாட்சியாளராகவோ இருக்குமிடத்து அந்த உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழு தம்மால் செய்யப்படவேண்டியுள்ள அதிகாரங்கள் எதனையும் நோக்காது அது தொடர்பாக ஒருவிதமான அதிகாரமும் அந்த உத்தியோகத்தருக்கு கையளிக்கப்படவில்லை எனக்கருதி தொடர்ந்தும் செயல்படுத்தப்படும்.

4. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 57 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள, 2016.10.27 ஆந் திகதிய 1990/24 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள "அ" அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரக் கையளிப்புக்கு ஏற்புடைய சுகாதார சேவை தொடர்பான ஏற்பாடுகள் இதற்கு முன்னரான வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அதிகாரக் கையளிப்புக்களின் கீழ் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படலாம் எனக் கருதக்கூடிய ஏதேனும் நடவடிக்கைகளுக்கு பாதிப்பின்றி இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

**அட்டவணை "அ"**

| *நிரல் I*<br>*உத்தியோகத்தர் வகுதி* | *நிரல் II*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *நிரல் III*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| 1. பின்வரும் அகில இலங்கைச் சேவைகளைச் சேர்ந்த தரம் I மற்றும் அதற்கு மேலான உத்தியோகத்தர்கள்<br>- இலங்கை மருத்துவ சேவை<br>- இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை | சுகாதார விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளர் | I. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள்<br>II. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/ 2016 பிரகாரம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணங்கள் வழங்குதல். |
| 2. பின்வரும் அகில இலங்கைச் சேவைகளைச் சேர்ந்த தரம் I க்கு கீழுள்ள உத்தியோகத்தர்கள்<br>- இலங்கை மருத்துவ சேவை<br>- இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை | சுகாதார விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளர் | I. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணங்கள் வழங்குதல் |
| | சுகாதார விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | II. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுங்காற்றுக் கட்டுப்பாடுகள். |
| 3. சுகாதார விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 6/2006 (இணைப்பு II) இல் பொருள் கோடப்பட்டுள்ள அகில இலங்கைச் சேவையொன்றைச் சாராத சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த தரம் I மற்றும் அதற்கு மேலான உத்தியோகத்தர்கள் | சுகாதார விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளர் | I. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுங்காற்றுக் கட்டுப்பாடுகள்.<br>II. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/ 2016 பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணங்கள் வழங்குதல். |
| 4. சுகாதார விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 6/2006 (இணைப்பு II) இல் பொருள் கோடப்பட்டுள்ள அகில இலங்கைச் சேவையொன்றைச் சாராத சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த தரம் I க்கு குறைவான உத்தியோகத்தர்கள் | சுகாதார விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளர் | I. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/ 2016 பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணங்கள் வழங்குதல். |
| | சுகாதார விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | II. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுங்காற்றுக் கட்டுப்பாடுகள். |

**அட்டவணை "அ"** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br>*உத்தியோகத்தர் வகுதி* | *நிரல் II*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *நிரல் III*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| 5. சுகாதார விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 6/2006 (இணைப்பு II) இல் பொருள் கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்ட அதி உயர் தரத்தைச் சேர்ந்த/ விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | சுகாதார விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளர் | I. அரசாங்க சேவை ஆணைக் குழு சுற்றறிக்கை இல. 3/2016 பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணங்கள் வழங்குதல் |
| | சுகாதார விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர், குறிப்பிடப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | II. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுங்காற்றுக் கட்டுப்பாடுகள். |
| 6. சுகாதார விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடிய இணைந்த சேவையைச் சாராத அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 6/2006 (இணைப்பு II) இல் பொருள் கோடப்பட்டுள்ள இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்ட உத்தியோகத்தர்கள் (ஆயுர்வேத திணைக்களம் தவிர்ந்த) | சுகாதார விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளர் | I. அரசாங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு/ சேவைப் பிரமாணக் குறிப்புக் களுக்கு அமைவான நியமனமும் பதவி உயர்வும்<br>II. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள்.<br>III. அரசாங்க சேவை ஆணைக் குழு சுற்றறிக்கை இல. 3/2016 பிரகாரம் வினைத் திறன் காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணங்கள் வழங்குதல். |
| | சுகாதார விடயத்துக்குப் பொறுப்பான அமைச் சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப் பிடப்பட்டு அரசாங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | I. அரசாங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமை வான வருடாந்த இடமாற்றங்கள் உள்ளிட்ட சகல இடமாற்றங்களும்<br>II. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் |

**அட்டவணை "அ"** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br>*உத்தியோகத்தர் வகுதி* | *நிரல் II*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *நிரல் III*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| 7. ஆயுர்வேத திணைக்களத்தின் கீழுள்ள இணைந்த சேவையைச் சாராத அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 06/ 2006 (இணைப்பு II) இல் பொருள் கோடப் பட்டுள்ள இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்ட உத்தியோகத்தர்கள் | ஆயுர்வேத ஆணையாளர் நாயகம் | I. அரசாங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு/ சேவைப் பிரமாணக் குறிப்புக் களுக்கு அமைவான நியமனமும் பதவி உயர்வும்<br>II. அரசாங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமை வான வருடாந்த இடமாற்றங்கள் உள்ளிட்ட சகல இடமாற்றங் களும்<br>III. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு கள் மற்றும் பதவி நீக்கம் செய் தல்<br>IV. அரசாங்க சேவைஆணைக் குழு சுற்றறிக்கை இல. 3/2016 பிரகாரம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட் சைகள் தொடர்பாக நிவார ணங்கள் வழங்குதல். |
| 8. சுகாதார விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடிய இணைந்த சேவையைச் சாராத அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 06/ 2006 (இணைப்பு II) இல் பொருள்கோடப்பட் டுள்ள ஆரம்ப மட்ட உத்தியோகத்தர்கள் (ஆயுர்வேத திணைக்களம் தவிர்ந்த) | சுகாதார விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | I. அரசாங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு/ சேவை பிரமாணக் குறிப்புக் களுக்கு அமைவான நியமனமும் பதவி உயர்வும்<br>II. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங் கள் தொடர்பான ஒழுக் காற்றுக் கட்டுப்பாடும் பதவி நீக்கமும்<br>III. அரசாங்க சேவை ஆணைக் குழு சுற்றறிக்கை இல. 3/2016 பிரகாரம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட் சைகள் தொடர்பாக நிவார ணங்கள் வழங்குதல். |
| | சுகாதார விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப் பிடப்பட்டு அரசாங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | I. அரசாங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமை வான வருடாந்த இடமாற் றங்கள் உள்ளிட்ட சகல இட மாற்றங்களும் |

**அட்டவணை "அ"** (தொடர்ச்சி)

| நிரல் I<br><br>உத்தியோகத்தர் வகுதி | நிரல் II<br><br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br><br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| | | II. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள். |
| 9. ஆயுர்வேத திணைக்களத்தின் கீழுள்ள இணைந்த சேவையைச் சாராத அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 (இணைப்பு II) இல் பொருள்கோடப் பட்டுள்ள ஆரம்ப மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத் தர்கள் | ஆயுர்வேத ஆணையாளர் நாயகம் | I. அரசாங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு/ சேவைப் பிரமாணக் குறிப்புக் களுக்கு அமைவான நியமனமும் பதவி உயர்வும்<br>II. அரசாங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமை வான வருடாந்த இடமாற்றங்கள் உள்ளிட்ட சகல இடமாற்றங் களும்<br>III. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் பதவி நீக்கமும்<br>IV. அரசாங்க சேவைஆணைக் குழு சுற்றறிக்கை இல. 3/2016 பிரகாரம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட் சைகள் தொடர்பாக நிவார ணங்கள் வழங்குதல். |

2- 675/1

---

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

அரசியலமைப்பின் 56 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்களை கையளித்தல்

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 56 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இங்கு "ஆ" அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் வகுதிகள் தொடர்பாக அட்டவணையின் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற சுகாதார சேவை குழுவுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் இத்தால் கையளிக்கப்படுகின்றன.

2. ஆயினும், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள ஏதேனும் அதிகாரங்களை கையளித்தல் பற்றிய விடயப் பரப்பு தொடர்பாக அல்லது ஆணைக்குழுவினால் அவ்வாறு மேற்கொள்ளப்படுவதற்காக ஏதேனும் கையளிக்கப்பட்ட அதிகாரங்களை செயல்படுத்துதல் விடயமாக ஏதேனும் வினாக்கள் எழும் சந்தர்ப்பங்களில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதியானதும், உறுதியானதுமாக அமையும்.

3. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 56 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள 2016.10.27 ஆந் திகதிய 1990/24 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள "ஆ" அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரக் கையளிப்புக்கு ஏற்புடைய சுகாதார சேவை தொடர்பான ஏற்பாடுகள் இதற்கு முன்னரான வர்த்தமானி அறிவித்தல்களில் பிரசுரிக்கப்பட்ட அதிகாரக் கையளிப்புக்களின் கீழ் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படலாம் எனக் கருதக்கூடிய ஏதேனும் நடவடிக்கைகளுக்கு பாதிப்பின்றி இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

**அட்டவணை "ஆ"**

| நிரல் I<br>உத்தியோகத்தர் வகுதி | நிரல் II<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|
| 1. பின்வரும் அகில இலங்கைச் சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்<br>- இலங்கை மருத்துவ சேவை<br>- இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு/சேவை பிரமாணக் குறிப்புக் களுக்கு அமைவான நியமனமும் பதவி உயர்வும்<br>II. அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான வருடாந்த இடமாற் றங்கள் உள்ளிட்ட சகல இடமாற்றங்களும்<br>III. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங் கள் தொடர்பான ஒழுங்காற்று கட்டுப்பாடும் பதவி நீக்கமும்<br>IV. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 மூலம் அமைச்சு செயலாளருக்கு வழங்கப் பட்டுள்ள அதிகாரங் களுக்கு மேலதிகமாக வினைத்திறண்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணம் வழங்குதல் |
| 2. சுகாதார விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடியதும் ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் வரக்கூடியதுமான அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 (இணைப்பு II) இல் பொருள்கோடப்பட்டுள்ள அகில இலங்கைச் சேவை யொன்றைச் சாராத சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள். | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு/சேவை பிரமாணக் குறிப்புக் களுக்கு அமைவான நியமனமும் பதவி உயர்வும்<br>II. அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான வருடாந்த இடமாற் றங்கள் உள்ளிட்ட சகல இடமாற்றங்களும்<br>III. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங் கள் தொடர்பான ஒழுங்காற்று கட்டுப்பாடும் பதவி நீக்கமும்<br>IV. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 மூலம் அமைச்சு செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக வினைத்திறண்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணம் வழங்குதல் |
| 3. சுகாதார விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடியதும் ஆயுர்வேத திணைக் களத்தின் கீழ் வரக்கூடியதுமான அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 (இணைப்பு II) இல் பொருள்கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்ட அதி உயர் தரத்தைச் சேர்ந்த/விசேட தரத்தைச் சேர்ந்த உத்தி யோகத்தர்கள் | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு/சேவை பிரமாணக் குறிப்புக் களுக்கு அமைவான நியமனமும் பதவி உயர்வும்<br>II. அரசாங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான வருடாந்த இடமாற் றங்கள் உள்ளிட்ட சகல இடமாற்றங் களும்<br>III. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங் கள் தொடர்பான ஒழுங்காற்று கட்டுப்பாடும் பதவி நீக்கமும்<br>IV. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 மூலம் அமைச்சு செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக வினைத்திறண்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணம் வழங்குதல் |
| 4. சுகாதார விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடியதும் ஆயுர்வேத திணைக் களத்தின் கீழ் வரக்கூடியதுமான இணைந்த சேவையைச் சாராத அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 (இணைப்பு II) இல் பொருள்கோடப்பட்டுள்ள இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்ட உத்தி யோகத்தர்கள் | I. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 மூலம் அமைச்சு செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக விளைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணம் வழங்குதல் |

**அட்டவணை "ஆ"** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br>*உத்தியோகத்தர் வகுதி* | *நிரல் II*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|
| 5. சுகாதார விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடியதும் ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் வரக்கூடியதுமான இணைந்த சேவையைச் சாராத அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 (இணைப்பு II) இல் பொருள்கோடப்பட்டுள்ள ஆரம்ப மட்ட உத்தி யோகத்தர்கள் | I. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2016 மூலம் அமைச்சு செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக விளைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணம் வழங்குதல் |

இந்த அதிகாரக் கையளிப்பு இங்கு குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைவாக இரண்டாயிரத்து பதினேழு (2017) பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி முதல் செயல்படும் வண்ணம் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச். எம். காமினி செனெவிரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல. 177, நாவல வீதி, நாராஹேன்பிட்ட,
கொழும்பு 05.
2017, சனவரி 31.

2- 675/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.